**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

-----

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Calender Case No. 1 of 2024**

**Deposition of witness for** : **PW13**

**Name** : **பழனி**

**Father's /Husband Name/** : **கண்ணாமணி**

**Village** : **வெள்ளைபாறையூர்**

**Taluk** : **போச்சம்பள்ளி**

**Calling** : **ஓட்டல்**

**Age** : **40**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.**

**எதிரிகள் 1 முதல் 6 வரை ஆஜர் 7ம் எதிரி ஆஜர் இல்லை வழக்கறிஞர் ஆஜர் கு.வி.மு.ச. 317 மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் வேலாம்பட்டியில் பெட்டி கடை வைத்து உள்ளேன். என்னிடம் காட்டப்படும் 3 பார்வை மகஜர்கள் மற்றும் கைப்பற்றும் மகஜரில் உள்ள 2 வது கையொப்பங்கள் என்னுடையது ஆகும். சுமார் 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் கருணாநிதி வீட்டாற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சண்டை நடந்து நாகரசம்பட்டி போலிஸார் வேலாம்பட்டியில் உள்ள நான் கடை வைத்துள்ள இடத்திற்கு வந்து அங்கு வரைபடம் வரைந்தார்கள், அங்கு விசாரணை செய்தார்கள். அதற்காக

கையொப்பம் வேண்டும் என கேட்டார்கள். அதற்காக கையொப்பம் போட்டேன். வேறு எங்கும் போலிஸார் என்னை அழைத்து செல்லவில்லை. மேற்படி 3 பார்வை மகஜர்கள் மற்றும் கைப்பற்றும் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் முறையே அ.சா.ஆ.6 முதல் 9 ஆகும். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சி முதல் விசாரணையில் 3 பார்வை மகசர்கள் மற்றும் கைப்பற்றும் மகசரில் உள்ள விவரங்கள் குறித்து சாட்சியம் அளிக்காததாலும் போலிஸார் வந்ததற்காக கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய கோரப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 07.05.2022 ம் தேதி காலை 10 மணிக்கு பாரூர் வட்ட காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவ இடமான வேலாம்பட்டியில் உள்ள கருணாநிதி வீட்டிற்கு அருகே வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வை இட்டு என் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு சாட்சியாக நான் பார்வை மகசரில் 2-வது ஆக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. பின்பு 10.30 மணிக்கு ராமூர்த்தி மாந்தோப்பில் இருந்த இரும்பு ராடு ஒன்றை என் முன்னிலையில் கைப்பற்றினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரும்பு ராடு கைப்பற்றியதற்காக நான் கைப்பற்றுதல் மகஜரில் 2-வது ஆக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. காலை 11.30 மணிக்கு பாரூர் வட்ட காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவ இடமான வேலாம்பட்டியில் உள்ள அரசு மதுபான கடை அருகே வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வை இட்டு என் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு சாட்சியாக நான் பார்வை மகஜரில் 2-வது ஆக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. மதியம் 13 மணிக்கு பாரூர் வட்ட காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவ இடமான காவேரிபட்டிண அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வை இட்டு என் முன்னிலையில்

மாதிரி வரைபடம் வரைந்தார் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு சாட்சியாக நான் பார்வை மகஜரில் 2-வது ஆக கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.